# தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2009
# அவுஸ்திரேலியா பட்டதாரிகள் தமிழர் சங்கம்
# Tamil Competition - Australian Society of Graduate Tamils

## தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் - 2009

15 ஆண்டுகளுக்கு முன்பு அவுஸ்திரேலியாவின் நியூசவுத்வேல்ஸ், கன்பரா மாநிலங்களில் தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் ஆரம்பிக்கப்பட்டன. 10 வது ஆண்டிலிருந்து **அவுஸ்திரேலியா பட்டதாரிகள் தமிழர் சங்கத்தின்** தலைமையின் கீழ் ஊக்குவிப்புப் போட்டிகள் நடாத்தப்பட்டு வருகின்றன. இந்த வருடப் போட்டிகளுக்கான கருப்பொருள் **"என்று எமது இன்னல்கள் தீர்ந்து பொய்யாகும்"** என்பதாகும். ஈழத்தில் சுமார் 60 வருடங்களாக எமது மக்கள் சொல்லொணா துன்பங்களுக்கு ஆளாகிவருகின்றார்கள். அவர்கள் துயர் நீங்கி நல்ல ஒரு எதிர்காலம் அமையாதா? என்ற கருத்தை மையமாக வைத்தே இந்த ஆண்டிற்கான போட்டிகள் நடைபெறவுள்ளன.

இந்தத் தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் சிட்னியிலும் மற்றைய அவுஸ்திரேலிய, நியூசிலாந்து மாநிலங்களிலும் நாடாத்தப்படவிருக்கின்றன. இம்முறையும் எழுத்தறிவுப் போட்டிகளுடன் பேச்சு, கவிதை மனனப் போட்டிகளும் (குறிப்பிட்ட பிரிவுகளில் மட்டும்) அவுஸ்திரேலிய-நியூசிலாந்து மட்டத்தில் தேசியப் போட்டிகளாக நடாத்தப்பட இருக்கின்றன. இப்போட்டிகள் முதலில் மாநில மட்டத்தில் நடாத்தப்பட்டுப் பின்னர் தேசிய மட்டத்தில் நடைபெறும். மாநிலப் போட்டிகளுக்கும், தேசிய மட்டத்திலான போட்டிகளுக்கும் வேறுவேறாகப் பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்படும். தேசிய மட்டத்தில் நடைபெறும் 10 போட்டிகளுக்கும் **தங்கப்பதக்கம்** முதற் பரிசாக வழங்கப்படும்.

சில முக்கியமான மாற்றங்களை இங்கு தருகின்றோம்:

1) **இளைஞர் பிரிவிற்கான விவாதப் போட்டி விலக்கப்பட்டுள்ளது.**
2) **தனிநடிப்புப் போட்டி 13 வயதுக்குட்பட்டவர்களுக்கான (மேற்பிரிவு) போட்டியாக நடை பெறும்.** ***(கடந்த ஆண்டு நடை பெற்ற 10 வயதுக்குட்பட்டவர்களுக்கான மத்திய பிரிவு தனிநடிப்புப் போட்டியும் 11 - 17 வயதினருக்கான மேற்பிரிவு தனிநடிப்புப் போட்டியும் விலக்கப்பட்டுள்ளன).***
3) **பல்திறன் போட்டி ஒரு விசேட போட்டியாக 13 - 30 வயதுக்குட்பட்டவர்களுக்கு நடாத்தப்படும்.** ***(கடந்த ஆண்டு பல்திறன் போடடிக்கான வயது எல்லை 18 - 30 வயது ஆகும்).***
4) **அண்மையில் அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்தில் குடியேறிய போட்டியாளர்களிற்கான தகுதி நிலையில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.**

ஆண்டுதோறும் உங்களிடமிருந்து எமக்குக் கிடைக்கின்ற கருத்துக்களைக் கொண்டு, இப்படியான பல மாற்றங்கள் செய்யப்படுவதனால், எமது போட்டிகளுக்கான விதிமுறைகளைக் கவனமாக வாசித்து அறியவும். அதன் பின்னரே நீங்கள் விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்யவேண்டும். எமது போட்டிகளுக்கான விதிமுறைகளும் மற்றைய விபரங்களும் இந்த விபரக் கொத்தில் அடங்கியுள்ளன. இவற்றைத் தமிழ்ப் பாடசாலைகளிலோ, அல்லது எமது இணையத் தளத்திலோ பெற்றுக் கொள்ளலாம். போட்டிக்கான விண்ணப்பப் படிவம் 2 பக்கங்களைக் கொண்டுள்ளது. தமிழ்ப்பாடசாலையூடாக விண்ணப்பிப்பவர்களின் விண்ணப்பப் படிவம் அவர்களின் பாடசாலையின் பிரதிநிதியால் சரிபார்க்கப்பட்டு விபரங்கள் உறுதி செய்யப்படவேண்டும். தனிப்பட்ட விண்ணப்பதாரிகள் தேவையான அத்தாட்சிப்பத்திரங்களை பரீட்சை மண்டபத்திற்கு எடுத்துவரவேண்டும்.

எமது சங்கத்தின் திட்டங்களை உள்ளடக்கிய புதியதொரு இணையத் தளம் (www.kalappai.org) கடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்டது. இதில் தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் பற்றிய அனைத்து விபரங்களையும் பெற்றுக் கொள்ளலாம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். எமது போட்டிகளில் மாநில, தேசிய மட்டங்களில் பங்குபற்றி உங்கள் திறமைகளைக் காண்பித்துப் பரிசுகளை வென்றெடுக்க எமது நல் வாழ்த்துக்கள்!!

**திரு. க. நரேந்திரநாதன்**
**இணைப்பாளர், தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் 2009**

# "என்று எமது இன்னல்கள் தீர்ந்து பொய்யாகும்"

**(இந்த வருடப் போட்டிகளுக்கான கருப்பொருள்)**

இந்தியாவையும் இலங்கையையும் தாயகமாகக் கொண்ட தமிழர்களாகிய நாம் இன்று உலகின் பல நாடுகளிலும் பரந்து வாழ்கிறோம். தாய் நாட்டிலும் புலம்பெயர்ந்த நாடுகளிலும் பல்வேறு இன்னல்களை நாம் எதிர்கொள்கின்றோம். தாய் நாட்டில் வாழும் தமிழர்கள் சமஉரிமை பேச்சுரிமை மற்றும் அடிப்படை வசதிகளை இழந்து விட்டநிலையில் சுதந்திரம் வேண்டி போராடுகின்றார்கள். புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் தமிழர்கள் தாயகத்து உறவுகள் படும் இன்னல்கள் கண்டு நேரடியாக உதவ முடியாத நிலையில் வருந்துகின்றார்கள். தம் சொந்தச்சகோதரர்கள் துன்பத்தில் வருந்துவதைக் கண்டு உதவிக்கரம் நீட்டி நிற்கின்றார்கள். எங்களுடைய இன்னல்களுக்கு பல்வேறு காரணங்களைக் கூற முடியும். அவற்றுள் சிலவற்றை இம்முறை ஆராயத் தலைப்பட்டுள்ளோம்.
நாம் ஒரு பல்கலாசார சமுதாயத்தில் வாழ்ந்து வருகின்றோம். புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் நாம் பல சவால்களை எதிர் கொள்கின்றோம். நாம் எமது சமுதாயத்தினரையும் மற்றைய சமுதாயத்தினரையும் புரிந்து இசைந்து வாழ்ந்து வருகின்றோம். மனிதனுக்கு மனிதன் மதிப்பளித்து ஒரு பல்லின சமூகமாக வாழத் தலைப்பட்டுள்ளோம்.

## பிரதான குறிக்கோள்

தமிழ் ஊக்குவிப்புப் போட்டி நடத்தப்படுவதன் பிரதான குறிக்கோள்: அவுஸ்ரேலியாவிலும் நியூசிலாந்திலும் தமிழ்மொழியையும், தமிழ்க் கலாசாரத்தையும் பல தலைமுறைகளுக்குப் பேணி வளர்ப்பதாகும்.

## நோக்கம்

தமிழர் புலம்பெயர்ந்த நாடுகளில் (குறிப்பாக அவுஸ்திரேலியா, நியூசிலாந்து நாடுகளில்) வாழ்கின்ற தமிழ்ச் சிறார்கள் தமிழ் கற்பதைத் தொடர்ந்து ஊக்குவிப்பதும், அவர்களிடையே தமிழ்மொழி, தமிழ்க் கலாசாரம் ஆகியனவற்றில் ஆர்வத்தினையும், பற்றினையும், ஈடுபாட்டினையும் ஏற்படுத்துவதுடன், இங்குள்ள தமிழ் இளைஞர்களிடையே நல்லதொரு தலைமைத்துவத்தை உருவாக்குவதும் எமது நோக்கங்களாகும்.

# தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் 2009
# பங்குபற்றுவதற்கான தகுதிகளும் பொது விதிமுறைகளும்

(உரிய இணைப்பை பார்க்கவும்)

# தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2009
# அவுஸ்திரேலியா பட்டதாரிகள் தமிழர் சங்கம்
# Tamil Competition - Australian Society of Graduate Tamils

**இணைப்பு-1**

## போட்டிகளும் வயதுப் பிரிவுகளும்

| போட்டி | சாதாரண போட்டிகள் | பிரிவு | வயது | பிறந்த திகதி |
|---|---|---|---|---|
| PP | கவிதை மனனப் போட்டி | பாலர் பிரிவு | 3-4 வயது | 01.07.2004 - 30.06.2006 |
| BP | கவிதை மனனப் போட்டி | ஆரம்ப பிரிவு | 5 வயது | 01.07.2003 - 30.06.2004 |
| BV | வாய்மொழித் தொடர்பாற்றல் | ஆரம்ப பிரிவு | 5 வயது | 01.07.2003 - 30.06.2004 |
| LP | கவிதை மனனப் போட்டி | கீழ்ப் பிரிவு | 6-7 வயது | 01.07.2001 - 30.06.2003 |
| LV | வாய்மொழித் தொடர்பாற்றல் | கீழ்ப் பிரிவு | 6-7 வயது | 01.07.2001 - 30.06.2003 |
| IV | வாய்மொழித் தொடர்பாற்றல் | மத்திய பிரிவு | 8-9 வயது | 01.07.1999 - 30.06.2001 |
| IW | எழுத்தறிவுப் போட்டி | மத்திய பிரிவு | 8-9 வயது | 01.07.1999 - 30.06.2001 |
| IS | பேச்சுப் போட்டி | மத்திய பிரிவு | 8-9 வயது | 01.07.1999 - 30.06.2001 |
| SV | வாய்மொழித் தொடர்பாற்றல் | மேற்பிரிவு | 10-12 வயது | 01.07.1996 - 30.06.1999 |
| SW | எழுத்தறிவுப் போட்டி | மேற்பிரிவு | 10-12 வயது | 01.07.1996 - 30.06.1999 |
| SS | பேச்சுப் போட்டி | மேற்பிரிவு | 10-12 வயது | 01.07.1996 - 30.06.1999 |
| AdSW | எழுத்தறிவுப் போட்டி | அதிமேற்பிரிவு | 13-17 வயது | 01.07.1991 - 30.06.1996 |
| AdSV | வாய்மொழித் தொடர்பாற்றல் | அதிமேற் பிரிவு | 13-17 வயது | 01.07.1991 - 30.06.1996 |
| AdSS | பேச்சுப் போட்டி | அதிமேற் பிரிவு | 13-17 வயது | 01.07.1991 - 30.06.1996 |

### விசேட போட்டிகள்

| | | | | |
|---|---|---|---|---|
| SpLV | விசேட எழுத்தறிவுப் போட்டி | கீழ்ப் பிரிவு | 8 வயதின் கீழ் | 01.07.2001 க்குப்பின் |
| SpSP | கவிதை மனனப் போட்டி | மேற்பிரிவு | 13 வயதின் கீழ் | 01.07.1996 க்குப்பின் |
| SplA | தனிநடிப்பு | மேற் பிரிவு | 13 வயதின் கீழ் | 01.07.1996 க்குப்பின் |
| SpYW | விசேட எழுத்தறிவுப் போட்டி | இளைஞர் பிரிவு | 18 - 30 வயது | 01.07.1979 - 30.06.1991 |

### குழுநிலைப் போட்டிகள்

| | | | | |
|---|---|---|---|---|
| AdSQ | வினாடி வினாப் போட்டி | அதிமேற் பிரிவு | 18 வயதின் கீழ் | 01.07.1991 க்குப்பின் |
| AdSD | விவாதப் போட்டி | அதிமேற் பிரிவு | 18 வயதின் கீழ் | 01.07.1991 க்குப்பின் |
| YT | பல்திறன் போட்டி | இளைஞர் பிரிவு | 18-30 வயது | 01.07.1979 - 30.06.1991 |

குறிப்பு: இங்கு நிழல்ப்படுத்தப்பட்ட போட்டிகள் அனைத்தும் தேசிய நிலையிலும் போட்டியாக நடாத்தப்படும். ஒவ்வொரு மாநிலத்திலும் மேலுள்ள அட்டவணையிலிருந்து போட்டிகள் தெரிந்தெடுக்கப்பட்டு நடாத்தப்படும். எனவே எல்லாப் போட்டிகளும் எல்லா மாநிலங்களிலும் நடாத்தப்படும் சாத்தியம் இருக்காது. தேசிய நிலைப் போட்டிகள் எல்லா மாநிலங்களிலும் நடாத்த முயற்சிகள் எடுக்கப்படும்.

# தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2009
# அவுஸ்திரேலியா பட்டதாரிகள் தமிழர் சங்கம்
# Tamil Competition - Australian Society of Graduate Tamils

இணைப்பு-2

## விண்ணப்பப் படிவம் APPLICATION FORM

குடும்பப் பெயர்: …………………………….. Family Name:…………………………….(in English)

முதற் பெயர்: ………………………………….First Name:…………………………………..(in English)

பிறந்த திகதி: …………………………………… பிறந்த நாடு:……………………………….

முகவரி:…………………………………………………………………………………………

மின் அஞ்சல் முகவரி:………………………………………………………………….........

தொலைபேசி: ………………………………கையடக்கத் தொலைபேசி:……………………

அவுஸ்திரேலியாவில் அல்லது நியூசிலாந்தில் பிறக்காதவராயின் நீங்கள் குடிபெயர்ந்த திகதி: ………………………… பிறந்த இடம்:…………………

நீங்கள் தமிழ் கற்கும் பாடசாலை:……………………………………………………….....

**2009 இல் பங்குபற்றும் போட்டி/போட்டிகள்:**

| சாதாரண போட்டிகள் | விசேட போட்டிகள் | குழுநிலைப் போட்டிகள் |
|---|---|---|
| | | |
| | | |

செலுத்த வேண்டிய கட்டணம்: (போட்டிகளின் எண்ணிக்கை) ……… x $5.00 = ……………

எமது போட்டி விதிமுறைகள் அனைத்தையும் வாசித்து விளங்கிக் கொண்டேன் என்றும், அந்த விதிமுறைகளுக்கு இணங்கி இந்த விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்கின்றேன் என்றும் உறுதியளிக்கின்றேன். அத்துடன் போட்டி விதிகளுக்கிணங்க, எனது விண்ணப்பப் படிவம் சரியான விபரங்களைக் கொண்டுள்ளதாகவும் உறுதி செய்கின்றேன். இந்த விபரம், அல்லது விபரங்கள் பிழையென அறியவரும் வேளையில் நான் போட்டியிலிருந்து விலக்கப்படலாம் என்பதையும் அறிவேன்.

________________________ __________________

கையொப்பம்(பங்குபற்றுபவர் / பெற்றோர்) திகதி:

மேற்குறிப்பிட்ட விபரங்கள் எனது அறிவுக்கு எட்டியவரை சரியென உறுதியளிக்கின்றேன்.

________________________ __________________

ஆசிரியர் / அதிபரின் கையொப்பம் திகதி:

## பொது விதிமுறைகள் - தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் 2009

1) போட்டியாளரின் வயது 01-07-2009 இல் உள்ளபடி கணிக்கப்படும்.
2) இந்த ஆண்டுக்கான வயதுப் பிரிவுகளும், போட்டி வகைகளும் தரப்பட்டுள்ளன.
3) ஒரு போட்டியாளர் ஆகக்கூடியது **இரு தனிப்பட்ட போட்டிகளில்** பங்குபற்ற அனுமதிக்கப்படலாம். இந்த விதி தேசிய மட்டத்தில் நடைபெறவிருக்கும் போட்டிகளுக்கான பிரிவுகளுக்கு மட்டுமே பொருந்தும். அதாவது கீழ்ப் பிரிவிலிருந்து அதிமேற் பிரிவு வரை. அப்படியாக ஒரு போட்டியாளர் தான் தெரிவு செய்யும் இரு போட்டிகளுள் எழுத்தறிவுப் போட்டியை ஒரு போட்டியாக எடுக்க வேண்டும். அத்துடன் விசேட மற்றும், குழு நிலைப் போட்டிகளில் போட்டியாளர்கள் மேலதிகமாகப் பங்குபற்றலாம்.
4) **வாய்மொழித் தொடர்பாற்றல் போட்டியில் எந்த வயதுப் பிரிவிலேனும் இறுதியாக 2008ம் ஆண்டு மாநில நிலையில் நடைபெற்ற போட்டிகளில் முதலாவது பரிசைப் பெற்ற போட்டியாளர் இந்த ஆண்டு வாய்மொழித் தொடர்பாற்றல் போட்டியில் எந்தப் பிரிவிலேனும் பங்குபற்றத் தகுதியுடையவராகார்.**
5) **2008ம் ஆண்டு பாலர் பிரிவிற்கான, அல்லது ஆரம்ப பிரிவிற்கான கவிதை மனனப் போட்டியில் முதற் பரிசு பெற்ற மாணவர்கள் தேசிய நிலையில் நடைபெறாத கவிதை மனனப் போட்டி ஒன்றில் மீண்டும் பங்குபற்ற அனுமதிக்கப்பட மாட்டார்கள்.**
   **2008ம் ஆண்டு தேசிய நிலையில் நடைபெற்ற எழுத்தறிவுப் போட்டி, பாடல் மனனப் போட்டி, பேச்சுப் போட்டியில் முதற்பரிசு (அதாவது தங்கப் பதக்கம்) பெற்றவர்கள் மீண்டும் இவ்வருடம் அவர்கள் பங்குபற்றிய போட்டிகளில் பங்குபற்ற அனுமதிக்கப்பட மாட்டார்கள்.**
6) அண்மையில் இந்தியா அல்லது இலங்கையிலிருந்து வந்து இங்கு குடியேறியவர்களுக்கென 8, 10, 13, 18, 30 வயதுக்குட்பட்டவர்கள் என ஐந்து பிரிவுகளில் விசேட போட்டிகள் நடாத்தப்படும். அவர்கள் சாதராண பிரிவுப் போட்டிகளில் பங்குபற்ற முடியாது என்பதை அறியத் தருகின்றோம். (மேலதிக விபரத்துக்கு 5.1ஐப் பார்க்கவும்).
7) போட்டியாளரின் வயது, பிறந்த இடம், அவுஸ்திரேலிய, நியூசிலாந்து நாடுகளில் குடியேறிய திகதி என்பன பற்றிய அத்தாட்சிகளை (Passport or Birth certificate) தேவைப்படின் காண்பிக்க வேண்டும். இந்த அத்தாட்சிகள் சமர்ப்பிக்கப்படாத சந்தர்ப்பத்தில் அவர்கள் போட்டிகளில் அனுமதிக்கப்பட மாட்டார்கள். எமக்குக் கிடைக்கப் பெறும் இந்த விபரங்கள் அனைத்தும் இரகசியமாக வைத்திருக்கப்படும் என்பதை உறுதிப் படுத்துகின்றோம்.
8) 2008ஆம் ஆண்டுப் போட்டிகளில் சுழல் / வெற்றிக் கேடயங்கள் பெற்றவர்கள் 2009 இல் தத்தமது போட்டிகளுக்கு முன்பாக கேடயங்களை ஒப்படைக்க வேண்டும். **இவ்வாறு கேடயங்களை ஒப்படைக்கத் தவறுபவர்கள் 2009 போட்டிகளில் பங்குபற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள்.**
9) ஒவ்வொரு போட்டிக்கும் $5.00 கட்டணமாக அறவிடப்படும். பல போட்டிகளில் பங்குபற்றும் போட்டியாளர் ஒருவர் அதிகபட்சமாக $15 மட்டுமே கட்டணமாக செலுத்தவேண்டும். ஒரு குடும்பத்தில் பல போட்டியாளர் பங்குபற்றும் சந்தர்ப்பத்தில் அந்தக் குடும்பத்திடம் ஆகக்கூடியது $30 மட்டுமே கட்டணமாக அறவிடப்படும்.
10) இப்போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் யாவும் **01-07-2009** ற்கு முன்னர் Coordinator, Tamil Competition, PO Box 4040, NSW 2140 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவேண்டும்.

### அலுவலக உபயோகத்திற்கு மட்டும்

போட்டி: சரி / பிழை வயது பிரிவு: சரி / பிழை இல:............

கட்டணம்: ............... செலுத்தப்பட்டது / செலுத்தப்படவில்லை

குறிப்பு:...........................................................................................

போட்டி இணைப்பாளர்:..........................................திகதி:....................................

# தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2009
# அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்
# Tamil Competition - Australian Society of Graduate Tamils

**இணைப்பு: 6**

## எழுத்தறிவுப் போட்டிகளின் விதிமுறைகளும் விளக்கங்களும்:

1) கீழ்ப்பிரிவிற்கான எழுத்தறிவுப் போட்டி(6-7 வயது): இது ஒரு மணி நேரப் பரீட்சை ஆகும்.
2) மத்தியபிரிவிற்கான எழுத்தறிவுப் போட்டி(8-9 வயது): இது 1 மணி 30 நிமிட நேரப் பரீட்சை ஆகும். இதற்கான மாதிரி வினாக்கள் கொடுக்கப்பட்டுள்ளன.
3) மேற்பிரிவிற்கான எழுத்தறிவுப் போட்டி(10-12 வயது): இது 1 மணி 30 நிமிட நேரப் பரீட்சை ஆகும். இதற்கான மாதிரி வினாக்கள் கொடுக்கப்பட்டுள்ளன.
4) அதிமேற்பிரிவிற்கான எழுத்தறிவுப் போட்டி(13-17 வயது): இது 1 மணி 30 நிமிட நேரப் பரீட்சை ஆகும். இதற்கான மாதிரி வினாக்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

5) **விசேட எழுத்தறிவுப் போட்டி: (1 மணி 30 நிமிட நேரப் பரீட்சை).** 18 - 30 வயதிற்கு உட்பட்ட எவரும் இப்போட்டியில் பங்குபற்றலாம். போட்டி இரண்டு பகுதிகளைக் கொண்டதாக அமைந்திருக்கும்.

**<u>முதல் பகுதியில்</u> உள்ள 50 வினாக்களில், முதல்** 40 வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் நான்கு விடைகள் கொடுக்கப்படும். அவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அடையாளமிடும் படி கேட்கப்படுவர். அடுத்துள்ள 10 வினாக்கள் கோடிட்ட இடங்களை நிரப்புவனவாக அமைந்திருக்கும். போட்டியாளர்கள் கோடிட்ட இடங்களில் பொருத்தமான சொல்லை எழுதும்படி கேட்கப்படுவர்.

**<u>இரண்டாவது பகுதியில்,</u>** கொடுக்கப்பட்டுள்ள ஒரு தலைப்பின் கீழ் சுமார் 150 சொற்களைக் கொண்ட கட்டுரை அல்லது கடிதம் அல்லது கவிதை ஒன்றினை எழுதும்படி கேட்கப்படுவர்.

6) எழுத்தறிவுப் போட்டிகள் நியூசவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகளின் பாடத்திட்டத்தைத் தழுவியதாக அமையும். அவுஸ்திரேலிய மொழிக்கல்வி தொடர்பான அணுகுமுறையும் (approach), விடயதானமும் (contents), அடைவுகளும் (outcomes) எல்லா மாநிலங்களுக்கும் பொதுவானவை என்பதை இங்கு குறிப்பிட விரும்புகின்றோம்.
7) எழுத்தறிவுப் போட்டிகள் மாநில, தேசிய மட்டங்களில் நடாத்தப்படுகின்றன. எனவே மாநில மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்படும். அவுஸ்திரேலிய, நியூசிலாந்து மாணவர்களிடையே முதற் பரிசு பெறும் போட்டியாளருக்குத் தங்கப் பதக்கம் வழங்கப்படும் என்பதையும் அறியத் தருகின்றோம்.
8) ஒவ்வொரு பிரிவிற்கும் அதற்கான மாதிரி வினாக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. கடந்த வருடப் பரீட்சையிலிருந்து 15 சதவீத வினாக்களும், வேறும் இந்த வகையான கேள்விகளும் வேறுசில கேள்விகளும் இடம்பெறலாம்.

9) போட்டிகளுக்கான பொது விதிமுறைகள்:
   - நீங்கள் பங்குபற்றும் போட்டிகள் பற்றிய விபரங்களையும், நேர அட்டவணையையும் போட்டிகளுக்கு ஒரு மாதம் முன்னதாகத் தமிழ்ப் பாடசாலைகளிலும், எமது இணையத்தளத்திலும் பெற்றுக் கொள்ளலாம். இந்த விபரங்களைப் பெறத்தவறின் எம்முடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.
   - கடந்த ஆண்டு (2006, 2007இ 2008) எழுத்தறிவுப் போட்டிகளுக்கான வினாத்தாள்களை எமது இணையத்தளத்திலிருந்து (www.kalappai.org) பெறலாம்.
   - போட்டி ஆரம்ப நேரத்திற்கு அரைமணி நேரத்திற்கு முன்பாக மண்டபத்திற்கு வரவேண்டும். தமது பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் அல்லது கடவுச் சீட்டினை முன்கூட்டியே காண்பிக்கத் தவறியோர் போட்டி ஆரம்ப நேரத்திற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்பாக மண்டபத்திற்கு வரவேண்டும்.
   - விண்ணப்பக் கட்டணத்தை (ஒரு போட்டிக்கு $5.00) முன்கூட்டியே செலுத்தி அசௌகரிகத்தைக் குறைக்கவும்.
   - மேலதிக விபரங்களுக்குப் போட்டிகளுக்குரிய முழுமையான எமது விதிமுறைகளை வாசிக்கவும். அல்லது எம்முடன் கீழுள்ள வழிகளில் தொடர்பு கொள்ளலாம்.

10) போட்டி விதிமுறைகளை மீறும் போட்டியாளர் அந்தந்தப் போட்டியிலிருந்து விலக்கப்படுவார். எமது பரீட்சைச் சபையின் (Board of Examiners) தீர்ப்பே இறுதியானது.

**தமிழ் ஊக்குவிப்புப் குழு,**
**அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்**

# தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2009
# அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்
# Tamil Competition - Australian Society of Graduate Tamils

**இணைப்பு: 10**

## இளைஞர் பல்திறன் போட்டிக்கான விதிமுறைகளும் விளக்கங்களும்:

1) இளைஞர் பல்திறன் போட்டி இந்த வருடம் முதல் முறையாக அறிமுகமாகின்றது. 18 - 30 வயதுக்குட்பட்ட இளைஞர்களுக்கான விசேட போட்டியாக இடம்பெறும். இரு போட்டியாளர்கள் கொண்ட குழுவாகப் பங்குபற்றவேண்டும்.
2) போட்டியின் போது நகைச்சுவைத் திறன், உடனே சிந்திக்கும் திறன் (thinking on the spot), மற்றும் சபை மரபு ஆகியவை கவனிக்கப்படும். உச்சரிப்பும் சொற்பிரயோகமும் பொருத்தமாக இருக்கவேண்டும்.
3) இத் தனித் திறன் போட்டி 5 - 6 நிமிடங்களுக்கு இடம்பெறும்.
4) **போட்டிக்கான கருப்பொருள்:** 'என்று எமது இன்னல்கள் தீர்ந்து பொய்யாகும்' என்பதாகும்.
   போட்டியின் தொடக்கத்தில் ஒவ்வொரு குழுவிற்கும் இந்தக் கருப் பொருளுடன் கூடிய தலைப்பு (சூழ்நிலை) சீட்டிழுப்பின் மூலம் கொடுக்கப்படும். சூழ்நிலைகள் பாடசாலை அல்லது குடும்பம் அல்லது தமிழ்க் கலாசாரம் சம்பந்தப்பட்டவையாக அமையும். குழுவில் இருக்கும் இருவரும் இந்த சூழ்நிலைக்கு ஏற்ப நகைச்சுவையுடன் கூடியதாக நடித்தோ, பேசியோ, பாடியோ, ஆடியோ தமது திறன்களை வெளிப்படுத்தலாம். ஆனால் ஒரு வகையான திறன் அதீதமாக (குறிப்பாக பாடலாகவோ அல்லது ஆடலாகவோ) இருத்தல் கூடாது.
5) போட்டியாளரின் நடிப்புத் திறன் பின்வரும் அம்சங்களிற் கவனிக்கப்படும்.
   **கருப்பொருளோடு ஒன்றிய செய்தி-விடயம்-வெளிப்பாடு (30%), குழுவின் முழுத்திறன் (50%), நகைச்சுவையுடன் கூடிய சபை ஆதிக்கம் (20%)** என்ற வகையாகக் கணிக்கப்படும்.

6) **கருப்பொருளோடு ஒன்றிய செய்தி-விடயம்-வெளிப்பாடு (30%),**
   - போட்டியாளர் எடுத்துக் கொண்ட தலைப்புச் செய்தியானது (கருத்து), 'என்று எமது இன்னல்கள் தீர்ந்து பொய்யாகும்' என்ற எமது கருப்பொருளோடு ஒட்டியதாகவும், சமூக விழுமியங்களுக்கு அமைவதாகவும் இருத்தல் வேண்டும்.
   - தழுவல் இல்லாத சுய தயாரிப்பாகவும் வெளிப்பாடாகவும் இருத்தல் வேண்டும்.

7) **குழுவின் முழுத்திறன் (50%)**
   - எடுத்துக் கொண்ட கதாபாத்திரத்தை அல்லது கருத்தைச் சரியாகவும், தெளிவாகவும் வெளிப்படுத்தும் முகமாக நடித்தல், பேசுதல், பாடுதல், ஆடுதல்.
   - மேடையில் உங்கள் நிகழ்வு தனியே ஒரு அம்சத்தைக் (முழுமையாக பாடலாகவோ அல்லது நடனமாகவோ) கொண்டதாக இருக்கக்கூடாது.
   - தொய்வில்லாத தொடர்ச்சியான ஒழுங்கமைக்கபட்ட நிகழ்வு முக்கியம்.

8) **நகைச்சுவையுடன் கூடிய சபை ஆதிக்கம் (20%),**
   - கருத்தோடு ஒட்டிய நகைச்சுவை உங்கள் நிகழ்வில் எதிர்பார்க்கப்படும்.
   - நகைச்சுவையுடன் புதிய உத்திகள் பாவிக்கப்படலாம்.
   - மேடையில் அன்று கிடைக்கக்கூடிய வசதிகளைத் தவிர எந்த மேடை வசதிகளும் செய்து கொடுக்கப்பட மாட்டாது.
9) **போட்டிகளுக்கான பொது விதிமுறைகளை மற்றைய போட்டி விபரங்களிற் பார்க்கவும்.**

**தமிழ் ஊக்குவிப்புப் குழு, அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்**

தொடர்புகளுக்கு: PO Box 4040 Homebush NSW 2140. Tel: 02-8824 3051 or 0419 255 625.
E-mail asogt.tc@gmail.com Web: www.kalappai.org

# தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2009
# அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்
# Tamil Competition - Australian Society of Graduate Tamils

**இணைப்பு: 13**

## போட்டிகள் பற்றிய உங்கள் கருத்து

அன்புடையீர்!
போட்டிகள் பற்றிய உங்கள் கருத்துக்களை அறிய விரும்புகின்றோம். உங்களது கருத்துக்களும் அபிப்பிராயங்களும் எதிர்காலத்தில் எமது போட்டிகளை மேலும் சிறப்பாக நடாத்த உதவும் என்பதை அறியத்தருகின்றோம். உங்கள் கருத்துக்களை நேரடியாகத் தரவிரும்பின் உங்கள் பெயர், தொலைபேசி இலக்கம் என்பவற்றைத் தரவும். நாங்கள் உங்களுடன் தொடர்பு கொள்வோம். நன்றி.

கீழேயுள்ள விடயங்களுக்குச் சரியென நீங்கள் எண்ணும் இலக்கத்தைத் தெரிக.

1) போட்டிபற்றி வழங்கப்பட்ட விளக்கம் 1 2 3 4 5

2) போட்டிகள் ஒழுங்கு செய்யப்பட்ட விதம்: 1 2 3 4 5

3) போட்டிகளை மதிப்பிடும் விதம் 1 2 3 4 5

4) போட்டிக்கு வழங்கப்பட்ட கவிதை, பேச்சு 1 2 3 4 5

5) பொதுவாகப் போட்டியாளர்களின் தரம் 1 2 3 4 5

6) போட்டியில் பெற்றோரின் ஒத்துழைப்பு 1 2 3 4 5

7) இப்போட்டியால் மாணவர்களடையும் பயன் 1 2 3 4 5

8) மீண்டும் பங்குபற்றவுள்ள விரும்பம் 1 2 3 4 5

குறிப்பு: 1 – மிகக்குறைவு, 2 - குறைவு, 3 - மத்திமம், 4 - நன்று, 5 - மிகநன்று.

9) போட்டியில் காணப்பட்ட குறைகள் அல்லது மேலும்சிறப்படையச் செய்யக்கூடிய விடயங்கள்:

……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………

10) நீங்கள் போட்டிபற்றி வேறு ஏதாவது கூறவிரும்புகிறீர்களா?

……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………

பெயர்: …………………………………….

தொலைபேசி: …………………………… திகதி:………………………

(குறிப்பு: போட்டி முடிந்தபின் இந்தப் படிவத்தை நிரப்பிப் போட்டி நடத்துனரிடம் கொடுக்கவும் அல்லது எமது முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.)

தொடர்புகளுக்கு: PO Box 4040 Homebush NSW 2140. Tel: 02-8824 3051 or 0419 255 625.
E-mail asogt.tc@gmail.com Web: www.kalappai.org

# தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2009
# அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்
## Tamil Competition - Australian Society of Graduate Tamils

**இணைப்பு: 14**

## Details for competition prizes – Tamil competitions 2009

**A) Gold medal - தங்கப்பதக்கம் ( 10)** - Aus $300.00 per medal
1st prize winner in national competitions level
**B) Memorial Trophy / Winner's trophy ( 10 )**- Aus $160.00 per trophy & First 3 prizes
1st prize winner in any competitions at state level.
**C) First 3 prizes (23 competitions)** - Aus. $60.00 per competition
Prizes for first 3 winners of any competitions
**D) Special Prizes (prizes for 5 winners)** - Aus. $50.00
A group of winners who are selected after first 3 prizes
**E) Special Prizes (prizes for 10 winners)** - Aus. $100.00
A group of winners who are selected after first 3 prizes
**F) Donations for certificates and other donations:** Your nominated amount

We honour all our donors by special mention on the prize giving ceremony souvenir.

---

## Details of your donation:

Name: ……………………………………………………………

Address: ………………………………………………………

Phone: ………………………..(H) ……………………..(O) ……………………..(Mobile)

Email: ………………………………………………

Category (one of the above):………………………………………………

Preferred name for the Prize: ………………………………………………………………

…………………………………………………………………………………………………..

Amount: …………………………………………………

Payment method: Cheque / Money order / cash

You may draw or cheque in favour of `Tamil competitions' and post it to our official address: P. O. Box 4040, Homebush, NSW 2140.

---------------------------------------- ---------------------------------------
Sponsor's signature Date